FREE DISTRIBUTION
EVERY SATURDAY

Vol-1, Issue - 19, Feb 18 - 24, 2017

# சத்திய யோகம்
SATHIYA YOGAM (Tamil Weekly)

★ Ashok Nagar
★ K.K.Nagar
★ Nesapakam
★ Ekkatuthangal
★ Jaferkhanpet

# பெசன்ட்நகர் ஸ்ரீ அஷ்டலட்சுமி

மும்பை மகாலட்சுமி திருக்கோவிலைப் போல சென்னையிலும் அமைக்க வேண்டும் என்று காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் எண்ணினார். அவர் எண்ணிய அத்திருப்பணியை முக்கூர் சீனிவாச வரதாச்சாரியார் என்பவர் மூலம் 1974ம் ஆண்டு இத்திருக்கோவிலின் திருப்பணி தொடங்கப்பட்டது.

மகாலட்சுமி திருக்கோயில் கிழக்கு நோக்கி வங்கக் கடலை நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. 45 அடி நீளமும், 45 அடி அகலமும் சதுர அமைப்பின் மீது 63 அடி உயரமுடைய இத்திருக்கோயில் அமைந்துள்ளது. அடிப்பீடம் மூன்றரை அடி உயரம் உள்ளது. இத் திருக்கோவிலை ஒரு முறை வழிபட்டால் கூட நினைவில் இருந்து கொண்டே இருக்கும்படி அஷ்டாங்க விமானத்தில் ஒன்பது சன்னிதிகள் அமைந்துள்ளன. அதே போன்று தரைத் தளம் சக்கரமாகவும், மொத்த அமைப்பும் மேருவாகவும், தரிசனத்திற்கு மேலே சென்று இறங்கி வரும் பாதை ஓம் வடிவாகவும் அமைந்துள்ளது. தரைத் தளத்தில் கிழக்கு நோக்கி, மகாலட்சுமி உடனுறை மகாவிஷ்ணு இருவரும் திருமணக்கோலத்தில் காட்சி தருகின்றனர். முதல் தளத்தில் கிழக்கே கஜலட்சுமி, தெற்கே சந்தான லட்சுமி, மேற்கே விஜயலட்சுமி, வடக்கே



வித்யாலட்சுமி ஆகிய நான்கு லட்சுமிகளின் தரிசனம் கிடைக்கும்.

அடுத்தடுத்துப் படிகள் மேலே ஏறிச் சென்றால், இரண்டாம் தளத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ள தனலட்சுமியின் தரிசனம் கிடைக்கும். தனலட்சுமியைத் தரிசனம் செய்துவிட்டு, மண்டப வழியே கீழே இறங்கி வந்தால், தெற்கே ஆதி லட்சுமி, மேற்கே தான்யலட்சுமி, வடக்கே தைரிய லட்சுமிகளின் தரிசனம் கிடைக்கும்.

இத்திருக்கோவிலின் பிரதான சன்னிதியில் உள்ள மகாலட்சுமி மகாவிஷ்ணுவைத் தரிசனம் செய்த பக்தர்கள், முதல் தளத்தில் உள்ள சந்தான லட்சுமி, விஜயலட்சுமி, வித்யா லட்சுமி, கஜலட்சுமிகளைத் தரிசித்து, பின் இரண்டாம் தளத்தில் உள்ள தன லட்சுமியைத் தரிசனம் செய்து, பின் கீழே இறங்கி, ஆதிலட்சுமி, தான்ய லட்சுமி, தைரிய லட்சுமிகளைத் தரிசனம் செய்கின்ற அமைப்பு 'ஓம்' என்ற பிரணவ எழுத்தின் வடிவத்தினை ஒத்திருக்கும். மேலும் வற்றாத வங்கக் கடல் எப்போதும் 'ஓம்' என்றே முழங்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் திருத்தலங்கள் ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றையே தீர்த்தங்களாகக் கொண்டு விளங்குகின்றன. ஆனால், இத்திருக்கோயில் வங்கக் கடலையே தீர்த்தமாக (புஷ்கரணியாக) கொண்டுள்ளது. இது இத்திருத்தலத்தின் தனிச் சிறப்பாகும். இத்திருக்கோவிலின் தலவிருட்சம் (மரம்) வில்வ விருட்சமாகும். மகாலட்சுமி வில்வத்தில் நுனி முதல் வேர் வரையில் வசிப்பதாக நம்பப்படுகிறது.

திருமணம் ஆகாதவர்கள், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் சந்தான லட்சுமிக்கு அர்ச்சனை செய்தும், சந்தானலட்சுமியின் அருளைப் பெறுகிறார்கள். வியாதிகளால் அவதிப்படுபவர்கள் ஆதிலட்சுமி சன்னிதி, தன்வந்திரி சன்னிதிகளில் அர்ச்சனை செய்து, தங்கள் வியாதிகளிலிருந்து குணமடையலாம். செல்வத்தில் பின்தங்கியவர்கள் தனலட்சுமிக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால் செல்வ வளம் பெறலாம். கல்வியில் குன்றியவர்கள் வித்யாட்சுமிக்கு அர்ச்சனை செய்து கல்வியருளைப் பெறுகின்றனர்.

LIFE CHANGING WORKSHOP
வாழ்க்கையை மாற்றும் பயிற்சி முகாம்
From 17.03.2017 - 4.00 pm to 19.03.17 - 4.00 pm
at Padapai
RESIDENCIAL WORK SHOP
Limited Members! Advance Booking
80563 79711, 93807 68069


ஐ கியூ
ஆப்டிக்கல்ஸ்
SPECIAL OFFERS
பிரேம் 1 வாங்கினால்
லென்ஸ் 1 இலவசம்
பிரேம் + ப்ரோக் ரெஸ்வு லென்ஸ்
சிறப்பு சலுகை ₹1599
CONTACT LENS 20% OFF
Buy 1 Get 1 Free Sunglass ₹349/-
எண். 27, அண்ணா மெயின் ரோடு, எம்.ஜி.ஆர் நகர்,
கே.கே.நகர், சென்னை 78. (சாந்தி ஹார்டுவேர்ஸ் அருகில்)
Ph: 044-24717575, Cell: 74015 20565



FREE CONSULTATION ONLY WITH
PRIOR APPOINTMENTS
044-24898069, 42667288
S.Y. DENTAL CARE
1270/33, 12th Sector,
77th Street, K.K.Nagar,
Chennai - 600 078.
93807 68069

## ஆசிரியர் கடிதம்!

சத்திய யோகம் வார இதழின் வாசகர்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கம்!

"வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வாடினார் வள்ளல்பிரான்! ஆன்மிகவாதிகள் நமக்கு பல நல்ல விஷயங்களை வழங்கிச் சென்றிருக்கின்றனர்.

அந்த வகையில் இந்த வாரம். 19ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருரான பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்தநாள் இன்று (18.02.2017). இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

தமது மனைவி சாரதாதேவியை கடவுளாகக் கண்டவர் அவர். இராமகிருஷ்ண பரமஹம்சர் அளவு இல்லாவிட்டாலும் பெண்மையைப் போற்றலாமே?

நட்புடன்
**கவிஞர் இ.மணிபாரதி**
ஆசிரியர்.


கதை, கட்டுரை, படைப்புகளை எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி

**சத்திய யோகம்**

1271/33, 12வது செக்டார், 77வது தெரு, கே.கே.நகர், சென்னை - 600 078.

e-mail: sathiyayogam@gmail.com

044-24898069, 044-42667288, 98408 95794.



**ஆட்கள் தேவை**

'சத்திய யோகம்' தமிழ் வாரஇதழுக்கு விளம்பரம் சேகரிக்க, அனுபவமிக்க அல்லது புதிய பிரதிநிதிகள் தேவை.

- நிர்வாகி



**விளம்பரதாரர்களே!**

உங்களது விளம்பரங்களை ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைக்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

e-mail: sathiyayogam@gmail.com

98408 95794


# மஹா தந்திரம்



மஹாபாரதக் கதையின் கீழ்க்கண்ட வீரர்களில், யாருடைய வீழ்ச்சிக்காகக் ஸ்ரீ கிருஷ்ணன் தீட்டிய திட்டம், Master Plan என்ற பாராட்டைப் பெறும்?

1) ஜயத்ரதன், 2) பீஷ்மர், 3) துரோணர் கர்ணன், 4) ஜயத்ரதன், 5) துரியோதனன் 6) விதுரர்...

அநேகம் பேர் கர்ணனின் வீழ்ச்சிக்குக் ஸ்ரீ கிருஷ்ணன் தீட்டிய யுக்தி தான் சரி என்று நினைப்பார்கள். இன்னும் சில பேர் ஜயத்ரதனைக் கொல்ல சூரியனை மறைத்தது தான் உயர்ந்தது என்று நினைக்கலாம். இதே மாதிரிதான், பீஷ்மர், துரோணர் இவர்களுக்கு எதிராக எடுத்த முயற்சிகள். ஆனால் சரியான விடை விதுரருக்காகத் தீட்டிய திட்டம்தான்.

இது என்ன புதுக் கதை? விதுரர் எங்கே சண்டை போட்டார்? அவரை வீழ்த்தக் ஸ்ரீ கிருஷ்ணன் ஏன்திட்டம் போட வேண்டும்? கேள்விக்கு விடை சொல்லும் முன் ஒரு சிறு பயணம் .

விதுரர், திருதராஷ்டிரருக்கும், பாண்டுவுக்கும் தம்பி என்றும், அவருடைய தாயார் ஒரு பணிப்பெண் என்றும் அநேகமாக எல்லோருக்கும் தெரியும். மகாநீதிமான், தருமத்திலிருந்து சிறிதளவும் நழுவாதவர் அவர்.

விதுரர் வைத்திருந்த வில் மஹா விஷ்ணுவின் வில். கோதண்டம் எனப்படும் அந்த வில்லை எவராலும் வெல்ல முடியாது. அர்ஜுனன் கையில் உள்ள வில் பிரம்மாவுடையது. காண்டீபம் என்பது அதன் பெயர். போர் என்று வந்து விதுரர் கோதண்டத்துடன் வந்து நின்று விட்டால் ஆனானப்பட்ட அர்ஜுனனால் கூட தன் வில்லான காண்டீபம் கொண்டு அவரை வெல்ல முடியாது!

கௌரவர் பக்கத்திலிருந்து போராடும் பெரிய வீரர்களை வீழ்த்த ஸ்ரீ கிருஷ்ணன் போட்ட திட்டங்கள் அவ்வளவு கடினமானது இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு பலஹீனம். பீஷ்மருக்குப் பெண்களுடன் போராட முடியாத மனநிலை. துரோணருக்குப் புத்திர பாசம். கர்ணனுக்கு அவனுடைய தயாள குணம். மேலும் இவர்கள் எல்லாரும் யுத்தத்தில் மரணம் அடைய வேண்டும் என்று நியதி.

சாஸ்திரம் சொல்கிறது. எல்லா சமயங்களிலும் பெண்களை கௌரவித்து, அவர்களை உயர்ந்த நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலே சொன்ன வீரர்கள் யாராவது இதன்படி நடந்துகொண்டார்களா? திரௌபதியை துச்சாதனன் துகில் உரியும்போது வாய் திறக்காமல் மௌனமாகத்தானே இருந்தார்கள் அதற்கான தண்டனை யுத்தத்தில் மரணம்.

சரி, இப்போது கேள்வி. விதுரருக்காக ஏன் திட்டம் தீட்ட வேண்டும்?

விதுரர் அப்பழுக்கில்லாதவர். மற்ற பெரியவர்கள் செய்த பிழையை அவர் செய்யவில்லை. துணிந்து, துரியோதனனையும் அவன் சகோதரர்களையும் கண்டித்து திரௌபதிக்காக வாதாடினார். அதனால் தருமம் தவறாத அவரை எப்படி யுத்தத்தில் சாகடிக்க முடியும். எவ்வளவு அவமானப் பட்டாலும் யுத்தம் என்று வந்தால், மற்ற பெரியவர்கள் பீஷ்மர், துரோணர் போல் விதுரரும் செஞ்சோற்றுக் கடனுக்காக., துரியோதனனுக்காகத் தானே போராட வேண்டிய கட்டாயத் துக்குள்ளாவார். முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அவர் வில் எடுத்தால் அவரை ஜெயிக்கவே முடியாது. இப்பொழுது புரிகிறதா?

விதுரர், கௌரவர்கள் பக்கம் நின்று போரிட்டால் பாண்டவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம் இல்லை. மஹாபாரதப் போரின் முடிவே வேறே மாதிரி ஆகிஇருக்க வாய்ப்பு உண்டு. அதனால் எல்லோரையும்விட மிக முக்கியமான நபர், விதுரர்தான். அவர் கௌரவர்களுக்காக நிச்சயம் போராடக் கூடாது. எப்படி தடுப்பது?

(தொடரும்)

## செல்வ வளம் பெருக காலபைரவர் வழிபாடு



நாம் பல நேரங்களில் நினைப்பது உண்டு நாம் கடினமாக உழைக்கிறோம். ஆனால் நம் உழைப்புக்கு ஏற்ற வருமானம் வருவதில்லை அப்படியே வந்தாலும் நம் கையில் இருப்பது இல்லை அதனால் நாம் என்ன செய்வது என்று தெரியவில்லை. அதற்கு ஒரு சிறந்த பரிகாரம் தான் பைரவர் வழிபாடு.

அதை நாம் எப்போது எப்படி செய்ய வேண்டும்?

ராகு கால நேரத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட விளக்குககளில் நல்லெண்ணை ஊற்றி, மிளகை ஒரு சிகப்பு துணியில் கட்டி திரியாக்கி ஏற்ற வேண்டும். பிறகு ஒருரூபாய் நாணயத்தை பைரவர் பாதத்தில் வைத்து வழிபட வேண்டும். அந்த ரூபாய் நாம் பணம் வைக்கும் இடத்தில் சிறிது வெந்தயம் சேர்த்து போட்டு வைக்க வேண்டும். ஒருமுறை வெந்தயம் சிறிது போட்டாலே போதும். இவ்வாறு நாம் தொடர்ந்து 11 வாரங்கள் வழிபட வேண்டும். அதை தொடர்ந்து நாம் கோவில் விட்டு வெளிவரும்போது அங்கு உள்ள பைரவர் வாகனமான நாய்களுக்கு நம்மால் முடிந்த உணவை வழங்க வேண்டும். இதைப்போல் செய்து வர நம் வறுமை படிப்படியாக நீங்கும். அதேநேரம் கண் திருஷ்டி, செய்வினை கோளாறுகள், ஏவல், பில்லி சூனியம் அனைத்தும் கட்டுக்குள் அடங்கும். பைரவருக்கு உகந்த நாளான தேய்பிறை அஷ்டமி அன்று அவரை வழிப்பட்டு நாம் முடிந்த அளவு ஏழை எளியவருக்கு உணவு வழங்குதல் மிகவும் சிறப்பு பைரவரை வழிப்பட்டு அனைத்து நன்மைகளும் பெறுவோம்.

**பிரசன்ன ஜோதிடர் எம்.எஸ். ஆனந்த்**
9840717171, 7502666111


**S.Y. YOGA ACADEMY**

Classes Conducted are



- ZUMBA
- YOGA
- AEROBICS
- CARDIO

HURRY UP TO AVAIL INTRODUCTORY OFFER

By Trained People

1270/33, 12th Sector, 77th Street, K.K.Nagar, Chennai - 600 078.

Ph: 79044 20161, 93807 68069
044-24898069, 42667288

# சிவவாக்கியர் 3



ஒரு நாள் சிவவாக்கியர் கூடைகள் முனைவதற்காக மூங்கில்கள் வெட்டி வர காட்டிற்குள் சென்றார். ஒரு மூங்கிலை வெட்டியபோது வெட்டுப்பட்ட இடத்திலிருந்து தங்கத்துகள் கொட்ட ஆரம்பித்ததை கண்ணுற்றார். அதில் துணுக்குற்றவர், 'இறைவா, உன்னிடம் முக்தியை நாடி விரைந்து கொண்டிருக்கிறேன். எனக்கு பொருளாசையை உண்டாக்கப் பார்க்கிறாயே? இது நியாயமா?' என்று புலம்பினார். இவரது புலம்பலைக் கண்டு நரிக்குறவ இளைஞர்கள் சிலர் ஓடி வந்தனர். என்னவென்று விசாரித்தனர். சிவவாக்கியர் பதட்டம் நிறைந்த குரலில், 'அதோ அந்த மூங்கிலிலிருந்து எமன் வருகிறான். அதைக்கண்டுதான் பயப்படுகிறேன்!' என்று சொல்லி தங்கம் உதிரும் மூங்கில்களை காட்டினார்.

நரிக்குறவ இளைஞர்கள் தங்கத் துகள்களை கண்டு வாய்பிளந்தார்கள். 'சிவவாக்கியனுக்கு பிழைக்கத் தெரியவில்லை!' என்று நக்கல் செய்தார்கள். எல்லோரும் சேர்ந்து தங்கத்துகள்களை மூட்டையாக கட்டினார்கள். அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். ஓரிடத்தில் அனைவருக்கும் பசித்தது. இரண்டுபேர் மூட்டைக்கு காவல் இருக்க, இரண்டு பேர் உணவு வாங்க செல்வது என்று முடிவெடுத்து அங்ஙனமே செய்தனர். உணவு வாங்க சென்ற இருவரும் 'தங்க மூட்டையை நாம் மட்டுமே பங்கு போட்டுக்கொள்ள வேண்டும்!' என்று திட்டமிட்டு மூட்டைக்கு காவல் இருந்தவர்களுக்கு வாங்கிய உணவில் விஷம் கலந்தனர். உணவு கொண்டு வந்த இருவரை மூட்டைக்கு காவலிருந்தவர்கள் பக்கத்தில் உள்ள கிணற்றில் குடிக்க தண்ணீர் கொண்டு வருமாறும் பணித்தனர்.

அவர்களும் கலயத்தை எடுத்துக் கொண்டு செல்ல, அவர்கள் அறியாதவண்ணம் பின்னாலேயே சென்ற தங்கமூட்டைக் காவலர்கள் கிணற்றருகில் அவர்கள் சென்றதும் அவர்களை உள்ளே தள்ளிவிட்டனர். 'நம் திட்டப்படி உணவு கொண்டு வந்தவர்கள் இரண்டு பேரின் கதையும் முடிந்துவிட்டது. இனி இந்த தங்க மூட்டை முழுவதும் நமக்கு இருவருக்கும்தான்!' என்ற சந்தோஷத்துடன் வாங்கி வந்த உணவை பிரித்து உண்டார்கள். விஷம் கலந்த உணவு அவர்கள் இருவரையும் கொன்று விட்டது. மறுநாள் மூங்கில் வெட்ட அதே பகுதிக்கு சென்ற சிவவாக்கியர் இந்த நான்கு பேரின் உடல்களையும் பார்த்தார். 'பொன்னாசை இவர்களை இப்படி கொன்றுவிட்டதே!' என்று மனம் வருந்தியவர் மறுபடி மூங்கில் வெட்டவே சென்றார்.

ஒருமுறை அவரை சிலர் அணுகி, 'சித்தர்களை நாங்கள் தரிசிக்க வேண்டும். அதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும். சித்தர்கள் மூலம் தங்கம் செய்யும் வித்தையை அறிந்து உலக மக்களின் வறுமையை அகற்ற முயல்வோம்!' என்றனர். அதற்கு சிவவாக்கியர், 'தங்கம், தங்கம் என்று அலைய வேண்டாம். அது கொலை, களவுகளுக்குத்தான் ஆட்படுத்தும். உங்கள் பொருளாசையை ஒழியுங்கள். சித்தத்தை சிவனிடம் வையுங்கள். பின் நீங்களே தங்கமாக ஆவீர்கள். தங்கத்தை அடைய இதுவே சுலபமான வழி!' என்றார். வந்தவர்கள் தலைகுனிந்து சென்றனர்.

(தொடரும்)

## கீரை தால் கிரிஸ்பி



**தேவையானவை:**

கடலைப்பருப்பு 100 கிராம், காய்ந்த மிளகாய் 2, பெருஞ்சீரகம் ஒரு டீஸ்பூன், பூண்டு 2 பல், முருங்கைக்கீரை ஒரு கப் (ஆய்ந்தது), பொட்டுக்கடலைப் பொடி ஒரு டேபிள்ஸ்பூன், கடுகு அரை டீஸ்பூன், வெங்காயம் ஒன்று (மிகவும் பொடியாக நறுக்கவும்), நறுக்கிய கறிவேப்பிலை சிறிதளவு, எண்ணெய், உப்பு தேவையான அளவு.

**செய்முறை:**

கடலைப்பருப்பை அரை மணி நேரம் ஊற வைத்து... காய்ந்த மிளகாய், பெருஞ்சீரகம், பூண்டு, உப்பு சேர்த்து கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு தாளித்து... வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்து நன்கு வதக்கி, அரைத்த கடலைப்பருப்பு விழுது, பொட்டுக்கடலைப் பொடி சேர்த்து நன்கு கிளறி, ஆய்ந்த கீரையை சேர்த்து ஒரு நிமிடம் நன்கு புரட்டி... பிறகு இறக்கி, சுடச்சுட பரிமாறவும்.



– டி.உஷாராணி,
M.A.B.L.,
Diploma in Food & Nutrition.

# இந்த வார ராசி பலன்

18-2-2017 முதல் 24-2-2017 வரை

மணிபாரதி

**மேஷம்**

சுயத்தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால்செழிக்கும். பணியாளர்கள், நற்பெயர், கூடுதல் சன்மானம் பெறுவர்.கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களின்ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் நிலை சீராகும். பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் பொதுவாக அமைதி இருந்தாலும், சிறு சிறு பிரச்சினைகள் தலைகாட்டும். சுப நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும். வரவேண்டிய பாக்கித்தொகைகளும் வசூலாகும்.பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும்.

**ரிஷபம்**

முயற்சியோடு செயல்படும் காரியங்கள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். சில காரியங்களில் தடை ஏற்பட்டாலும், நண்பர்கள் உதவியுடன்வெற்றிபெறுவீர்கள். கூட்டுத்தொழிலில் வியாபாரம் சுமாராக நடந்தாலும், வழக்கமான லாபம் குறையாது. . உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு பதவி உயர்வும், சிலருக்கு சம்பள உயர்வும்கிடைக்கக்கூடும். சிலர் காதல் வசப்படலாம்.வீடு கட்ட வங்கியில் போட்டிருந்த கடன் விண்ணப்பத்தின் பேரில் கடன் கிடைக்கும்.

**மிதுனம்**

இந்த வாரம் பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றத்தை காணலாம். பங்கு வர்த்தகத்தில் நிதானமாக செயல்படவும். அரசுத்துறையில் உள்ளவர்கள் தங்கள் துறை சம்பந்தமான கோப்புகளை கவனமுடன் கையாள்வது நல்லது. சில காரியங்களில் ஆரம்ப தடைகள் ஏற்பட்டாலும் நண்பர்கள் உதவியுடன் சமாளித்து விடுவீர்கள். கூட்டு தொழில் வியாபாரத்தில் இலாபம் குறையாது. ரியல் எஸ்டேட் துறையினர் அளவான லாபம் காண்பார்கள்.

**கடகம்**

இந்த வாரம் பொருளாதார நிலையில் கணிசமான முன்னேற்றத்தை காணலாம். விருந்தினர் வருகையால் வீடு கலகலப்பாகும். வெளியில் செல்வீர்கள். சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். வீட்டுக்குத் தேவையானபொருள்கள் வாங்கலாம். உறவினர்கள், நண்பர்கள் சிலருக்கு கடன் உதவி செய்வீர்கள். கணவன்மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.தம்பதிகளுக்குள் அன்யோன்யம் பெருகும்.

**சிம்மம்**

எழுத்துத்துறை,கம்யூனிகேஷன் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். பாங்காளிகளுக்குள் இருந்த கோர்ட்கேஸ் விவகாரங்கள் சமரசத்துடன் தீர்வாகும். தாயாரின் உடல் நலனில் சிறிது கவனம் தேவை. மாணவர்கள் தங்கள் பாடத்திட்டங்களில் சிரிவர கவனமாக படிப்பது நல்லது. அரசுத்துறையில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது நல்லது. கலைத்துறையினர் அளவுடன் ஏற்றம் காண்பார்கள்.

**கன்னி**

இந்த வாரம் எதிலும் நிதானத்துடனும், விழிப்புணர்வுடன் செயல்படவும். மனைவியுடனும், நண்பர்களுடனும் வீண் விவாதம் வேண்டாம். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ஷேர் மார்க்கெட்டில் உள்ளவர்கள் தாங்கள் வைத்திருக்கும் பங்குகளில் நல்ல உயர்வும், இலாபமும் பெற லாம். சிலருக்கு தொண்டையில் பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். இளைய சகோதரர் வழியில் உதவிகளை எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் உள்ளவர்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

**துலாம்**

இந்த வாரம் மனைவி அல்லது தாய்க்கு உடல் உபாதைகள் வந்து நீங்கும். தொழில் முறை கூட்டாளிகளுடன் பரஸ்பரம் அமைதியுடன் செயல்படவும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். தவிர்க்க இயலாத புதிய செலவினம் உருவாகும். மனைவியுடனும், நண்பர்களுடனும் வீண் விவாதம் வேண்டாம். தாயாரின் உடல் நலனில் சிறிது கவனம் தேவை. மாணவர்கள் தங்கள் பாடத்திட்டங்களில் சிரிவர கவனமாக படிப்பது நல்லது.

**விருச்சிகம்**

வாரப்பிற்பகுதியில் பொருளாதாரத்தில் இருந்த மந்த நிலை மாறி முன்னேற்றம் காணப்படும்.உறவினர்கள் மத்தியில் கௌரவம்,அந்தஸ்து உயரும்.தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை.கன்னிப் பெண்களே! காதல்விவகாரத்தை தள்ளி வைத்து விட்டு உயர்கல்வியில் உங்கள் கவனத்தை முழுமையாகதிருப்புவது நல்லது.மாணவமாணவிகளே! கணிதப் பாடத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். வீண் அலைச்சல்களைத் தவிர்க்கவும்.

**தனுசு**

கணவன்மனைவிக்குள் இருந்த மோதல்கள்விலகும். மனம் விட்டு பேசி சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களுடைய நிலைமையைப் புரிந்துக் கொள்ளாமல் உங்களுக்கு அவ்வப்போது அன்புத்தொல்லை தருவார்கள். கண் பார்வையை பரிசோதித்துக் கொள்வது நல்லது.வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்யுங்கள். உத்யோகத்தில் அதிகாரிகளை அரவணைத்துப் போங்கள்.

**மகரம்**

தொழில் போட்டிகளை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். தந்தையுடனான உறவில் சிறிய மனசஞ்சலத்திற்கு ஆட்படலாம்.சிலருக்கு காதல் கைகூடும்.கூட்டுத்தொழில் வியபாரம் செய்பவர்கள் விட்டுக்கொடுத்து போவது நல்லது.பணவிஷயத்தில் வாக்குறுதிகளை அளிக்க வேண்டாம்.சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உணர்ச்சிவசப்பட்டு பேசவேண்டாம். ஆடம்பரச் செலவுகளை குறைக்கப்பாருங்கள். தற்சமயம் பதவி வகிக்கும் துறையிலேயே தொடர்வது நல்லது.

**கும்பம்**

இந்த வாரம் குடும்பத்துடன் வெளியூர் பிரயாணம் உண்டு. சிலர் பழைய வாகனங்களை கொடுத்து புதிய வாகனம் வாங்க நேரிடும்.தொழில் முறை கூட்டாளிகளுடன் பரஸ்பரம் அமைதியுடன் செயல்படவும். இயந்திரம்,ரசாயனம்,எண்ணெய்,பலசரக்கு வியாபாரிகள் அளவான வளர்ச்சியை பெருவார்கள். கலைஞர்கள் தங்கள் செயல்களில் உற்சாகமாகஈடுபடுவர்.உங்கள் சொத்து சம்பந்தப்பட்ட பத்திரங்கள், ஆவணங்களையெல்லாம் பாதுகாப்பாகஎடுத்து வையுங்கள்.

**மீனம்**

இந்த வாரம்உறவினர்களின் வரவால் மன மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும்.காதல் விவகாரங்களில் எதிர் பார்த்து இருந்த நல்லசெய்திகள்வந்துசேரும். கலைத்துறை அன்பர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள். பெண்களுக்கு ஆடை,ஆபரண சேர்க்கை நிகழும். இந்த வாரம் கேட்ட இடத்தில் கடைசி நேரத்தில் உதவி கிடைக்கும். பங்குச்சந்தையில் எதிர்பார்க்கும் லாபம் இல்லாவிட்டாலும்ஓரளவு லாபம் இருக்கும்.

Title Code : 2016048863 R.Dis No.: 1416/2016


# SATHIYA YOGAM

## Spiritual Guide:
## Dr. T. SATHYANARAYANA MURTHY



A follower of Siddha Guru Shivananda Paramahamsa and Gurudev Nithyananda Baba of Ganeshpuri. Decades of Practice Dr. Sathya Narayana Murthy has explored lot of techniques from various Teachers, Gurus, Siddhas and became a master to Teach Meditation in a simple Scientific Method.

**He conducts workshops in India, Singapore, Malaysia, Srilanka, Mauritius periodically.**

Meditation helps to explore our inner potentials and reality of one's life. Meditation invokes energy from the universe to self and cures our health hazards while also keeping our psychological being well. All the major blocks that break our physical and emotional issues will be cleansed by regular practice of what we learn from meditation. Sathiya Yogam programmes include asanas, pranayamas and meditations to lead a completely spiritual, materialistic, healthy and joyful life. The ultimate aim is to be free from the Cycle of Birth and Death.

**BASIC COURSE:**

**The Mooladhara Ganapathi Sadhana, Art of Healing, Art of Blessing, Art of Communication, Manifestation of Goals. Chakra Meditation, Deconcentration Meditation etc.,**

**ADVANCE COURSE:**

**Scanning and Healing Techniques, Pillar of Light Spiritual Surgery, Materialisation sowbhagya Dhyana & Pendulum Dowsing**

**INDEPENDENT COURSE:**

1. **Navagraha Dhyanam & Mantra Siddhi,**
2. **Shivashkthi Vaibhavam & Crystal healing,**
3. **Guru Sakshathkaram & Psychic Self Defence,**
4. **Shiva Vidya** (inititation)
5. **Shiva Vidya** (Advance),
6. **Sri Vidya** (Level 1,2,3).
7. **Sarva Siddhi** (Arogyam, Aishwaryam, Sankalpa Siddhis)
8. **Gnana Mugam** (Seminar for Enlightenment)
9. **Mind Power Made Easy**
10. **Brahma Vidya** (Jeevan Mukthi)

**FOR ANY ENQUIRY:**

**80563 79711, 93807 68069**

1270/33, 12th Sector, 77th Street, K.K.Nagar, Chennai - 600 078.

sathiyayogam@gmail.com www.sathiyayogam.com




# ஆன்மீக கேள்வி-பதில்

**● ஸ்ரீ பகவத்**

... சென்ற இதழ் தொடர்ச்சி

**கே :** நிகழ்காலம் என்று ஒன்று கிடையாது. எதிர்காலம் இருப்பதால் அதன் Relative aspect - தொடர்புத்தன்மை காரணமாக மட்டுமே நிகழ்காலம் இருக்கிறது.

**ஸ்ரீ :** ஆமாம். அதே நேரம், எதிர்காலம் முக்கியத்துவம் பெறுவதன் அளவுக்கு நிகழ்காலம் முக்கியத்துவத்தை இழக்கிறது.

**கே :** பிரவாகத்தில் இருக்கும்போது, அதை நிகழ்காலம் என்று கூறிவிடலாம்.

**ஸ்ரீ :** ஆம் அப்படித்தான்.

**கே :** அதை சாட்சித்தன்மை என்றும் கூறலாம்.

**ஸ்ரீ :** அப்படியும் கூறிக் கொள்ளலாம். அதுவும் தானாகத்தான் நிகழ்கின்றது. நாம் அதனைக் கொண்டு வருவதில்லை. சாட்சித் தன்மையைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் விரும்பினால், அங்கே ஒரு டிமாண்ட் ஏற்பட்டு விடும். ஒரு தேடுதல் ஏற்பட்டுவிடும். அது ஒருபோதும் சாட்சித் தன்மையாக இருக்காது. தேடுதலை விட்ட நிலையில், நம்மையறியாமல் சாட்சி நிலைக்கு வந்துவிடுகிறோம்.

சாட்சித் தன்மையில் தொடர்பு உள்ளது. ஒரு நிகழ்ச்சியை நாம் சாட்சியாக இருந்து பார்க்கிறோம் என்றால், நமக்கும் அந்த நிகழ்வுக்கும் தொடர்பு உள்ளது. நாம் அதனை கவனிக்காமலேயே விட்டு விட்டால், அங்கு நமக்குத் தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. அந்த நிகழ்வினால் நமக்குப் பாதிப்பு எதுவும் இல்லாமலும் இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் இருக்கும் நிலை சாட்சித் தன்மையாக இருக்கும். டிமாண்ட் இல்லாத நிலையில்தான் பாதிப்பு எதுவும் நமக்கு இருக்காது. டிமாண்ட் எதிர்பார்ப்பு இல்லாத நிலைதான் சாட்சி நிலை. ●


**ஸ்ரீ பகவத் மிஷன்**

இலவச ஆலோசனை (தொலைபேசி மூலம்)

மன அழுத்தம், பதட்டம் மற்றும் கோபம்

Free Tele Counselling for Depression, Anxiety, anger etc.

Call : 9994205880, 9444402986, 9551253636.


# வாழ்வே மாறும்!

அவசர யுகத்தில் எல்லாமே அவசரம்தான். அதுபற்றி கடந்த வாரம் வெளியிட்டிருந்தோம்.

கை, கால்களை அசைப்பது உடற்பயிற்சியில் ஒரு அங்கம். கை, கால் அசையும் படி வீட்டு வேலைகள் செய்வது கூட நல்ல உடற்பயிற்சியே.

இதற்காக ஜிம்முக்குப் போக வேண்டியதில்லை. அவரவர் வேலைகளே நல்ல உடற்பயிற்சி. உடல் நலம் சீர் கெட்ட பின், மருத்துவர்கள் நடைப்பயிற்சி செய்யுங்கள் என்று கூறிய பிறகு கடற்கரைப் பகுதியிலோ, அதிகாலையில் தங்களது பகுதி தெருக்களிலோ ஓடுவதை வழக்கமாக்கிக் கொள்கின்றனர்.

சித்தர்கள் நமக்குக் கற்றுத் தந்த



நெறிகளே, யோகா எனப்படுகின்றது. இந்தந்த யோகா செய்தால் இன்னின்ன நோய்கள் குணமாகும் என வரையறை செய்து ஓலைச்சுவடிகளில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரம் கூறியது போல், பதட்டம், பதட்டம், தேவையில்லாத பதட்டம்தீர என்ன செய்யலாம். அதையும் சித்தர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். 'குரு இல்லா வித்தை பாழ்' என்றனர். எந்தவொரு விஷயம் ஆகட்டும், அதனைக் கற்றுத்தர குரு அவசியம்.

கற்றறிந்த குருவின் துணையோடு வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களைக் கற்றுக் கொண்டு அதன்படி நடந்தால் 'வாழ்வே மாயம்' என்று சொல்லமாட்டீர்கள். வாழ்வே மாறும் என்றுதான் சொல்வீர்கள்.

வாழ்வை மாற்றப் போகும் பயிற்சியை யார் கற்றுத்தரப் போகிறார்கள் என்பதைச் சற்றே உற்றுப் பாருங்கள். உங்கள் வாழ்வே மாறும். உங்களால் உங்களைச் சுற்றி இருப்பவர்களின் வாழ்வும் மாறும்.

(தொடரும்)

Owned, Published and Printed by SATHYANARAYANA MURTHY, No.1271/34, 12th Sector, 77th Street, K.K.Nagar, Chennai - 78. Printed at SEAMAN GRAPHICS, No:65, Chellappa Street, Otteri, Chennai - 12. Editor: E.Manibharathi.